

# திருக்குறள்

அடுத்த தலைமுறையினர் எளிமையாக திருக்குறளை
உள்வாங்குவதற்கான புதிய அணுமுறை.

***The new approach to internalise THIRUKKURAL easily to the next generation.***

**ஆக்கம் : பொள்ளாச்சி நசன்**

**விளக்கம் : சிவா பிள்ளை**

உலக திருக்குறள் மாநாடு லிவர்பூல் இங்கிலாந்து
27,28,29 ஜூலை 2018



## திருக்குறள் படித்தல்

(ஒரே நாளில் 300 திருக்குறளை அறிதல்)

அனைவருக்கும், வணக்கம்.

ஒவ்வொரு திருக்குறளிலும் மிகக் குறைந்த சொற்களே (6 – 10) உள்ளன.

அவை திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் மக்களின் பயன்பாட்டில் இருந்த சொற்களே.

திருக்குறள் எழுதப்பட்டு 2000 ஆண்டுகளுக்கு மேலானதால் சொற்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் திரிந்து வேறுபட்டு, இப்பொழுது உரை எழுதிப் படிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

திருக்குறள் "குறள்வெண்பா" வகையில் எழுதப் பட்டுள்ளது. எனவே பாக்கள் அனைத்தும் 7 *சீர்*களாகப் பிரிக்கப் பட்டுள்ளன. *சீர்* அமைப்பிற்கு ஏற்பச் சொற்களை இணைத்தும், இசைக்காகச் சொற்களைக் கூட்டியும் அமைக்கப்பட்டுள்ளன. சில பாக்களில் சொற்கள் முன் பின்னாக வெட்டி ஒட்டி இணைக்கப்பட்டுள்ளன. இவை திருவள்ளுவரது புலமையின் நுட்பத்தையும் ஆழத்தையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன.

வீடு அழகாகவும், ஒழுங்காகவும், வாழ்முறைக்கு ஏற்றதாகவும், பாதுகாப்பாகவும், பலரும் வியந்து போற்றுவதற்கு உரியதாகவும் இருப்பதற்காகக் கட்டடக்கலைஞர் செங்கற்களால், ஓர் ஒழுங்கமைவு முறையில் வீட்டைக் கட்டுவதுபோல, திருக்குறள் மிகச் சரியான சொற்களைக் கொண்டு ஓர் ஒழுங்கமைவு முறையில் அனைவரும் வியந்து போற்றி எந்தக்காலத்திலும் பின்பற்றும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

கற்றல் என்பது படித்து உணருகிற செயல்தான். உணர்ந்து, உள்வாங்கி, அதன்வழி வாழ்முறைகளை ஆக்கிக் கொள்ளுகிற உயரிய படிநிலைதான். ஆனால் இன்றைய கற்றல் என்பது மதிப்பெண்களுக்குள் சுருங்கிப்போய்க் கிடக்கிறது. இவ்வாறே திருக்குறளும் அதே நிலையிலேயே புறந்தள்ளப்பட்டுள்ளது.

திருக்குறளை ஒவ்வொருவரும் படிப்பது என்பது - அவரது மகிழ்வான, போற்றுதலுக்குரிய, இறந்தாலும் பேசப்படுகிற, உயரிய வாழ்முறைக்கான கைவிளக்குகளைக் கண்டறிவதற்காகத்தான்.

1330 விளக்குகளைத் திருவள்ளுவர் உருவாக்கி, அவற்றை 133 பெட்டிகளில் வைத்துள்ளார்.

ஒவ்வொருவரும், ஒவ்வொரு நாளும் தனக்கான ஒரு விளக்கைப் படித்து அறிந்து, தனக்குள் ஏற்றி வைத்துக்கொண்டு தனது வாழ்க்கைப் பாதையில், மகிழ்வோடு இறுதிக்காலம் வரை தொடர இயலும்.

2000 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய திருவள்ளுவர், தம் காலத்து மக்களிடையே கண்டறிந்த பண்புகளின் அடிப்படையில், தன்னுள் எழுந்த, பின்பற்றக்கூடிய, வாழ்வியலின் ஒழுகலாறுகளை, வரிசைப்படுத்தி, குறட்பாக்களாகப் பதிவு செய்துள்ளார். இந்த ஒழுகலாறுகள் உலக மாந்தர்கள் அனைவரும் கண்டு, உணர்ந்து, பின்பற்ற வேண்டிய ஒழுகலாறுகளே. நாடு, இனம், மொழி கடந்து உலகில் மகிழ்வாக வாழ விரும்பும் ஒவ்வொரு மாந்தரும் படித்து உணருவதற்காகவே இப் பாக்கள் படைக்கப்பட்டுள்ளன.

திருக்குறளைப் படித்து, உணர்ந்து, உள்வாங்கும் பொழுது, திருவள்ளுவர் காட்டுகிற ஒழுகலாறுகளை மாந்தர்கள் தங்களுக்குள் வரிசைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இந்த உலகில் பிறந்த ஒவ்வோர் உயிரியும் மகிழ்ச்சியாக வாழவே விரும்புகிறது.

பல்வேறு புறச்சூழல்களில் சிக்கித் தவித்து, அகத்தை நெறிப்படுத்த இயலாது, கலங்கி, உழன்று, இறுதிவரை துன்பச்சேற்றிலேயே மூழ்கி மூழ்கி, மாண்டு போகின்றனர்.

மகிழ்வாக வாழ அகமும், புறமும் நெறிப்படுத்தப்பட வேண்டும். இதுதான் பண்டைய தமிழர் கண்ட வாழ்முறை. அந்த வாழ்முறைக்கான பண்புக்கூறுகளை வரிசைப் படுத்துவதே திருக்குறளின் நோக்கம்.

ஒவ்வொரு திருக்குறளையும் படிக்கும்பொழுது இந்த நினைவுகளுடனேயே படிக்கவும். ஒவ்வொரு குறளையும் ஒவ்வொரு வாழ்முறையாக உங்களுக்குள் பதிய வைத்துக் கொள்ளவும்.

இது உங்களுக்கு,

**பிற உயிர்களிடத்து அன்பு காட்டவும்,**
**பிறர் வியந்து போற்றும்படி வாழவும்,**
**வாழும் ஒவ்வொரு நாளும் பயனுள்ளதாக அமைத்துக் கொள்ளவும்,**

வழி அமைக்கும்.

எனவேதான் உலகமக்கள் திருக்குறளை எளிமையாக யாருடைய உதவியும் இல்லாமல் தாங்களாகவே படித்துப் புரிந்து கொண்டு, தங்கள் வாழ்முறையைச் செப்பமாக அமைத்துக் கொள்வதற்காக இந்தத் திருக்குறள் படித்தல் பயிற்சியினை எளிமையாக்கி வடிவமைத்துள்ளேன்.

1330 குறள்களில் தொடக்க நிலையாகத் தாங்களாகவே எளிமையாகப் படித்து உணரக்கூடிய 303 குறள்களை வரிசைப்படுத்தி இத்துடன் இணைத்துள்ளேன். இரண்டாவதாக 500, மூன்றாவதாக 527 குறள்களையும் வரிசைப்படுத்தத் திட்டமிட்டுள்ளேன்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள தொடக்க நிலையில் இரண்டு படிகள் உள்ளன.

படி 1 இல் ஒவ்வொருவரும் தாங்களாகவே படித்து உணரக்கூடிய 26 திருக்குறள்களும், படி 2 இல் புரியாத சில சொற்களுக்கான பொருளை தட்டச்சு செய்தும் இணைத்துள்ளேன். கீழ்க்காணும் படிநிலைகளில் நீங்கள் படிக்கும் ஒவ்வொரு திருக்குறளையும் படித்து நெஞ்சில் நிறுத்தவும்.

1. ஒவ்வொரு குறளையும் தனித் தனிச் சொல்லாகப் படிக்கவும்.
2. தனித் தனிச் சொல்லுக்கான பொருளை உங்களுக்குள் உணரவும்.
3. பிறகு சொற்களுக்கான பொருளை ஒன்றாக இணைத்துப் பார்க்கவும்.
4. உங்கள் சொந்த நடையில் நீங்கள் உணர்ந்ததை வரிசைப்படுத்தவும்.
5. உங்களது புரிதலை, உங்கள் வாழ்வில் கண்ட நிகழ்வுகளோடு பொருத்திப் பார்க்கவும்.
6. உங்களது இந்தப் புரிதலை இணைத்துக் கதைபோல அடுத்தவருக்குச் சொல்லவும்.
7. இப்பொழுது நீங்கள் படித்த திருக்குறள் உங்களுக்குள் பதிந்துவிடும்.
8. பதிந்த திருக்குறளை உங்கள் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தத் தொடங்குங்கள்.

அன்புடன்,
16/6/15
பொள்ளாச்சி நசன், தமிழம்.வலை., தமிழம்.பண்பலை.


http://www.thamizham.net http://www.thamizham.net/thamizhamfm.htm,

pollachinasan@gmail.com mobile: 97 88 55 20 61

படிக்கத்தெரிந்தவர் அனைவரும்
திருக்குறளைப் படித்து உணரலாம்



படிநிலை 1

அருகில் உள்ள திருக்குறளை
ஒவ்வொரு சொல்லாகப் படியுங்கள்

படித்த ஒவ்வொரு சொல்லின்
பொருளையும் முதலில் உணர்ந்து
கொள்ளுங்கள்.

பிறகு சொற்களுக்கான பொருளை
ஒன்றாக இணைத்துப் பாருங்கள்

உங்களின் சொந்த நடையில்
நீங்கள் உணர்ந்ததை வரிசைப்
படுத்துங்கள்.

உங்கள் முன் தோன்றும் இந்தப்
புரிதலை, உங்கள் வாழ்வில் கண்ட
நிகழ்வுகளோடு பொருத்திப்
பாருங்கள்.

உங்கள் வாழ்வியலில் கண்ட
நிகழ்வுகளோடு திருக்குறளின்
கருத்தையும் இணைத்துக்
கதைபோல அடுத்தவருக்குச்
சொல்லுங்கள்.

நீங்கள் படித்த திருக்குறள்
உங்களுக்குள் பதிந்துவிடும்.



## சொற்களைப் புரிந்து கொண்டாலே குறள் புரியும்

நன்றி மறப்பது நன்றுஅன்று நன்றுஅல்லது
அன்றே மறப்பது நன்று. (108)

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு. (27)

மக்கள் மெய் தீண்டல் உடற்கு இன்பம் மற்று அவர்
சொல் கேட்டல் இன்பம் செவிக்கு. (65)

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என் நோற்றான் கொல் எனும் சொல். (70)

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவர்உள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து. (125)

சொல்லுக சொல்லில் பயன் உடைய சொல்லற்க
சொல்லில் பயன் இலாச் சொல். (200)

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். (202)

தோன்றின் புகழொடு தோன்றுக அஃது இலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. (236)

அருள் இல்லார்க்கு அவ் உலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ் உலகம் இல்ஆகி யாங்கு. (247)

தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள். (251)

புறம் தூய்மை நீரான் அமையும் அகம் தூய்மை
வாய்மையால் காணப் படும். (298)

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (355)

நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றும் தன்
உண்மை அறிவே மிகும். (373)

படிக்கத்தெரிந்தவர் அனைவரும்
திருக்குறளைப் படித்து உணரலாம்



படிநிலை 1

அருகில் உள்ள திருக்குறளை
ஒவ்வொரு சொல்லாகப் படியுங்கள்

படித்த ஒவ்வொரு சொல்லின்
பொருளையும் முதலில் உணர்ந்து
கொள்ளுங்கள்.

பிறகு சொற்களுக்கான பொருளை
ஒன்றாக இணைத்துப் பாருங்கள்

உங்களின் சொந்த நடையில்
நீங்கள் உணர்ந்ததை வரிசைப்
படுத்துங்கள்.

உங்கள் முன் தோன்றும் இந்தப்
புரிதலை, உங்கள் வாழ்வில் கண்ட
நிகழ்வுகளோடு பொருத்திப்
பாருங்கள்.

உங்கள் வாழ்வியலில் கண்ட
நிகழ்வுகளோடு திருக்குறளின்
கருத்தையும் இணைத்துக்
கதைபோல அடுத்தவருக்குச்
சொல்லுங்கள்.

நீங்கள் படித்த திருக்குறள்
உங்களுக்குள் பதிந்துவிடும்.



## சொற்களைப் புரிந்து கொண்டாலே குறள் புரியும்

முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப் படும். (388)

கண் உடையர் என்பவர் கற்றோர் முகத்து இரண்டு
புண் உடையர் கல்லா தவர். (393)

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை (411)

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (423)

பற்று அற்றகண்ணும் பழைமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள. (521)

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சி தன்
மெய் வருத்தக் கூலி தரும். (619)

ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. (656)

அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். (706)

முக நக நட்பது நட்பு அன்று நெஞ்சத்து
அக நக நட்பது நட்பு. (786)

சிறுமை பல செய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவது ஒன்று இல். (934)

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. (963)

உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார் மற்று எல்லாம்
தொழுது உண்டு பின் செல்பவர். (1033)

யான்நோக்கும் காலை நிலம்நோக்கும் நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும். (1094)

# ஒரே நாளில் 300 திருக்குறளை அறிதல் (அ)

## படிநிலை 2. பக்கம் 01

திருக்குறள் முழுவதும் சுட்டிக் காட்டப்படுவது அன்பு, அறன் என்கிற இரண்டு சொற்கள். இந்த இரண்டு சொற்களை நாம் நம் வாழ்க்கையில் செப்பமாக் கையாளுவதற்குக் குறள் முழுவதும் ஒழுகலாறுகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

**அன்பு** = எல்லா உயிர்களிடத்தும் எப்பொழுதும் அன்போடு நடந்து கொள்ளுதல் **அறம்** = நீண்ட நெடுங்காலமாக மக்களினம் ஆங்காங்கே கண்ட வாழ்வியல் உண்மைகளை நெகிழவிட்டு விடாமல் தொடர்ந்து கைக்கொண்டு எதிர்கால மக்களுக்கு அவற்றைப் புலப்படுத்துகின்ற ஒரு கூறாக அறிமுகப்படுத்துகின்ற ஒரு திரட்சியான வடிவமே அறம். மாந்த ஒழுகலாறுகள் நன்றாக முறுகக் கடையப்பட்டு அதிலிருந்து வெண்ணைபோல் திரண்டு வருகின்ற கருத்துத் தொகுதிகளே அறம்.
பாவலரேறு பெருஞ்சித்திரனார் பவானி திருக்குறள் தொடர் சொற்பொழிவில் கூறியவை.

| | | |
|---|---|---|
| வான் சிறப்பு | **விசும்பின் துளி வீழின் அல்லால் மற்று ஆங்கே<br>பசும்புல் தலை காண்பு அரிது. (1/16)** | விசும்பு= வானம், வீழின்= விழுவதால் |
| | **தானம் தவம் இரண்டும் தங்கா வியன் உலகம்<br>வானம் வழங்காது எனின். (2/19)** | தங்கா= நிலைக்காது, வியன்= அகன்ற |
| நீத்தார் பெருமை | **இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார்<br>பெருமை பிறங்கிற்று உலகு. (3/23)** | இருமை= நன்மை+ தீமை, ஈண்டு= இவ்வுலகில், பிறங்கிற்று= உயர்ந்தது |
| பொதுநலன் வலியுறுத்தல் | **ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே செல்லும்<br>வாய் எல்லாம் செயல். (4/33)** | ஒல்லும்= செய்யக்கூடிய, ஓவாது= இடைவிடாது |
| | **மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்து அறன்<br>ஆகுல நீர பிற (5/34)** | மாசு= குற்றம், ஆகுல= ஆரவாரிக்கும், நீர= தன்மை உடையன |
| | **அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்<br>இழுக்கா இயன்றது அறம். (6/35)** | அழுக்காறு= பொறாமை, அவா= ஆசை, வெகுளி= சினம், இழுக்கா = நீக்கிய |
| குடும்பவாழ்க்கை | **அன்பும் அறனும் உடைத்துஆயின் இல்வாழ்க்கை<br>பண்பும் பயனும் அது. (7/45)** | உடைத்துஆயின்= உடையதாக இருக்குமானால் |
| | **அறத்துஆற்றின் இல்வாழ்க்கைஆற்றின் புறத்துஆற்றின்<br>போஒய்ப் பெறுவது எவன். (8/46)** | ஆற்றின்= வழியில், புறத்து= இல்லறம் அல்லாத, போஒய்= போய், எவன்= யாது/ என்ன, |
| மனைவியின்பெருமை | புகழ் புரிந்த இல் இலோர்க்கு இல்லை இகழ்வார்முன் ஏறு<br>போல் பீடு நடை. (9/59) | இல் = மனைவி, ஏறு= காளை, பீடு= பெருமை மிக்க |
| | மங்கலம் என்ப மனை மாட்சி மற்று அதன்<br>நன்கலம் நன் மக்கள் பேறு. (10/60) | மங்கலம்= அழகு, மனை= மனைவி, நன்கலம்= நல்ல அணிகலம் பேறு= செல்வம் |
| மக்கட்பேறு | **தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து<br>முந்தி இருப்பச் செயல். (11/67)** | ஆற்றும்= செய்யும், நன்றி= நன்மை, அவையத்து= அரங்கில், |
| | ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் தன்மகனைச்<br>சான்றோன் எனக் கேட்ட தாய். (12/69) | உவக்கும்= மகிழும், |
| அன்பு | அன்புஇலார் எல்லாம் தமக்குஉரியார் அன்புஉடையார்<br>என்பும் உரியர் பிறர்க்கு. (13/72) | என்பும்= எலும்பும்/ உடலும் |

# ஒரே நாளில் 300 திருக்குறளை அறிதல்

## படிநிலை 2. பக்கம் 02

| | | |
|---|---|---|
| அன்பாக இருத்தல் | என்பு இல் அதனை வெயில் போலக் காயுமே<br>அன்பு இல் அதனை அறம். (14/77) | என்பு= எலும்பு, காயும்= துன்புறுத்தும் |
| | அன்பு அகத்து இல்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண்<br>வற்றல் மரம் தளிர்த்து அற்று. (15/78) | வன்பாற்கண்= வறண்ட பாறையில், வற்றல்= காய்ந்த |
| விருந்தினரைப் பேணுதல் | விருந்து புறத்ததாத் தான் உண்டல் சாவா<br>மருந்து எனினும் வேண்டற்பாற்று அன்று. (16/82) | விருந்து= விருந்தினர், புறத்ததா= விட்டுவிட்டு, வேண்டற்பாற்று= விரும்பத்தக்கது |
| | செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்<br>நல்விருந்து வானத்து அவர்க்கு. (17/86) | ஓம்பி= போற்றி, |
| | மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து<br>நோக்கக் குழையும் விருந்து. (18/90) | மோப்ப= நுகர்ந்தால், குழையும்= வாடும், அனிச்சம்= மலரின் பெயர், |
| இனிமையாகப் பேசுதல் | முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானாம்<br>இன்சொல் இனிதே அறம். (19/93) | முகத்தான்= முகத்தினால், அமர்ந்து=மலர்ந்து, அகத்தான்= மனத்துடன் |
| | அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை<br>நாடி இனிய சொலின். (20/96) | அல்லவை= தீயவை, தேய= அழிய, நாடி= தேடி, |
| | இனிய உளவாக இன்னாத கூறல்<br>கனியிருப்பக் காய் கவர்ந்து அற்று. (21/100) | இன்னாத= கடுமையான சொற்கள், கவர்ந்து= திருடுதல், அற்று= போன்றது |
| செய்த நன்றி மறக்காமல் இருத்தல் | காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்<br>ஞாலத்தின் மாணப் பெரிது. (22/102) | காலம்= சரியான நேரத்தில், மாண= மிக, ஞாலம்= உலகம், |
| | தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்<br>கொள்வார் பயன் தெரிவார். (23/104) | தினைத்துணை= தினை என்னும் சிறிய அளவு, |
| | உதவி வரைத்து அன்று உதவி உதவி<br>செய்யப்பட்டார் சால்பின் வரைத்து. (24/105) | வரைத்து= அளவு, சால்பு= பண்பு |
| | கொன்றுஅன்ன இன்னா செயினும் அவர் செய்த<br>ஒன்று நன்று உள்ளக் கெடும். (25/109) | கொன்றுஅன்ன= கொல்வதைப்போன்ற, உள்ள= நினைக்க, இன்னா= துன்பம் |
| நடுவுநிலைமை | நன்றே தரினும் நடுவு இகந்து ஆம் ஆக்கத்தை<br>அன்றே ஒழிய விடல். (26/113) | நடுவு= பக்கச் சார்பற்ற, இகந்து= தவறி, ஆம்= ஆகும், |
| | தக்கார் தகவிலர் என்பது அவர் அவர்<br>எச்சத்தால் காணப்படும். (27/114) | தக்கார்= சரியானவர், தகவிலர்= சரிஅற்றவர், எச்சம்= எஞ்சி நிற்கும் நல்லனவற்றால் |
| புலன் அடக்கம் | நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்<br>மலையினும் மாணப் பெரிது. (28/124) | நிலை= நிமிர்ந்துநிற்றல், திரியாது= மாறுபடாமல், மாண= மிகவும், |

# ஒரே நாளில் 300 திருக்குறளை அறிதல்

## படிநிலை 2. பக்கம் 03

| | | |
|---|---|---|
| அடக்கம் உடைமை | தீயினால் சுட்ட புண் உள்ஆறும் ஆறாதே<br>நாவினால் சுட்ட வடு. (23/129) | உள்ஆறும்=உள்ளே ஆறும், வடு= மாறாத தழும்பு, |
| உணர்வுகளை ஒழுங்குபடுத்துதல் | ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்<br>உயிரினும் ஓம்பப் படும். (30/131) | விழுப்பம்= சிறப்பு, ஓம்ப= பாதுகாக்க |
| | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்<br>எய்துவர் எய்தாப் பழி. (31/137) | எய்துவர்= அடைவர், இழுக்கம்= ஒழுக்கம் தவறுதல், எய்தா= அடையக்கூடாத |
| | உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்<br>கல்லார் அறிவு இலாதார் (32/140) | ஒட்ட= பொருந்த, ஒழுகல்= வாழ்தல், |
| மற்றவர் மனைவியை விரும்பாமை | பகை பாவம் அச்சம் பழி என நான்கும்<br>இகவாஆம் இல் இறப்பான் கண். (33/146) | இகவா= நீங்காது, இறப்பான்= நெறி தவறிச் செல்கிறவன் |
| | பிறன் மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு<br>அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு. (34/148) | பிறன்= அடுத்தவன், மனை= மனைவி, ஒன்றோ= ஒன்றே அல்லாமல், ஆன்ற= மேலான, ஒழுக்கு=ஒழுக்கம் |
| பொறுமையாக இருத்தல் | அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை<br>இகழ்வார்ப் பொறுத்தல் தலை. (35/151) | அகழ்வார்=தோண்டுவார், தலை= சிறந்தது, |
| | மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம் தம்<br>தகுதியான் வென்று விடல். (36/158) | மிகுதி= செறுக்கு, தகுதியால்= பொறுமைப் பண்பினால், |
| பொறாமை அடையாமை | கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்<br>உண்பதூஉம் இன்றிக் கெடும். (37/166) | கொடுப்பது= பிறருக்குக் கொடுப்பதை, அழுக்கறுப்பான்= பொறாமை கொள்வான், |
| | அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்<br>கேடும் நினைக்கப் படும். (38/169) | அவ்விய= பொறாமையுள்ள, ஆக்கம்= உயர்வு, செவ்வியான்= நல்லவன், நினைக்க= ஆராய |
| பிறர் பொருளை விரும்பாமை | அஃகாமை செல்வத்திற்கு யாது எனின் வெஃகாமை<br>வேண்டும் பிறன் கைப் பொருள். (39/178) | அ:.காமை= அளவு சுருங்காமை, வெ:.காமை= பிறர் பொருள் விரும்பாமை |
| | அறன்அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்<br>திறன் அறிந்து ஆங்கே திரு. (40/179) | அறன்அறிந்து= அறம் என அறிந்து, திறன்= தகுதி, திரு=செல்வம், |
| காணாத பொழுது இழித்து உரைக்காமல் இருத்தல் | புறம்கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலின் சாதல்<br>அறம்கூறும் ஆக்கம் தரும். (41/183) | புறம்கூறி= காணாத போது இழிவாகப்பேசி, சாதல்= இறத்தல், ஆக்கம்= பெருமை |
| | பிறன் பழி கூறுவான் தன் பழி உள்ளும்<br>திறன் தெரிந்து கூறப் படும். (42/186) | உள்ளும்= எண்ணும், திறன்= கூறுபாடு, வகை, கூறப்படும்= பிறர் கூறுவார்கள், |
| | ஏதிலார் குற்றம்போல் தம் குற்றம் காண்கிற் பின்<br>தீதுஉண்டோ மன்னும் உயிர்க்கு. (43/190) | ஏதிலார்= பிறர், மன்னும்= நிலைபெறும், |

| | | |
|---|---|---|
| பயனின்றிப் பேசுவதைத் தவிர்த்தல் | பல்லார் முனியப் பயனில சொல்லுவான்<br>எல்லாரும் எள்ளப் படும். (44/191) | பல்லார்= பலரும், முனிய= வெறுக்கும்படி, எள்ள= இகழ, |
| | பயன் இல் சொல் பாராட்டுவானை மகன் எனல்<br>மக்கள் பதடி எனல். (45/196) | பாராட்டுவான்= பலமுறை சொல்பவன், பதடி= பதர், (நெல் மணியற்றது பதர்) |
| | நயன் இல சொல்லினும் சொல்லுக சான்றோர்<br>பயன் இல சொல்லாமை நன்று. (46/197) | நயன்= நல்ல பயன், பயன் இல= பயன் இலாதது, |
| தீமை செய்ய அஞ்சுதல் | மறந்தும் பிறன் கேடு சூழற்க சூழின்<br>அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு. (47/204) | கேடு= தீமை, சூழற்க= செய்ய நினைக்காதே, சூழும்= எண்ணும், |
| | இலன் என்று தீயவை செய்யற்க செய்யின்<br>இலன் ஆகும் மற்றும் பெயர்த்து. (48/205) | இலன்= இல்லாதவன், ஏழை, தீயவை= பிறருக்குத் தீமை |
| (ஒப்புரவு அறிதல்) எல்லார்க்கும் எல்லாமும் என்று அறிதல் | தாள்ஆற்றித் தந்த பொருள் எல்லாம் தக்கார்க்கு<br>வேளாண்மை செய்தல் பொருட்டு. (49/212) | தாள்ஆற்றி= முயற்சி செய்து, வேளாண்மை= உதவி, |
| | ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான் மற்றையான்<br>செத்தாருள் வைக்கப் படும். (50/214) | ஒத்தது= ஒத்துப் போகும் அறிவு, மற்றையான்= ஒத்தது அறியாதவன், |
| | ஊருணி நீர் நிறைந்து அற்றே உலகு அவாம்<br>பேரறிவாளன் திரு. (51/215) | ஊருணி=குளம், கிணறு, உலகு= உலகம், அவாம்= விரும்பும், |
| | ஒப்புரவினால் வரும் கேடு எனின் அஃதொருவன்<br>விற்றுக்கோள் தக்கது உடைத்து. (52/220) | ஒப்புரவு= எல்லார்க்கும் எல்லாமும் என்று அறிதல், கோள்தக்க=கொள்ளத்தக்க, |
| (ஈகை) ஏழைகளுக்கு உதவுதல் | வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்று எல்லாம்<br>குறி எதிர்ப்பை நீரது உடைத்து. (53/221) | வறியார்க்கு= ஏழைக்கு, குறிஎதிர்ப்பு= பயனை எதிர் பார்த்து, நீரது= தன்மை உடையது, |
| | அற்றார் அழிபசி தீர்த்தல் அஃது ஒருவன் பெற்றான்<br>பொருள் வைப்புழி. (54/226) | அற்றார்= ஏழை, பெற்றான்= பொருளைப் பெற்றான், வைப்புழி= வைக்கும் வங்கி, |
| | சாதலின் இன்னாதது இல்லை இனிது அதூஉம்<br>ஈதல் இயையாக் கடை. (55/230) | இன்னாதது= கொடியது, அதூஉம்= அதுவும், இயையாக்கடை= முடியாத இடத்து, |
| (புகழ்) இறந்தும் பேசப்படுதல் | ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது<br>ஊதியம் இல்லை உயிர்க்கு. (56/231) | இசைபட= புகழோடு (இறந்தாலும் பேசப்படுதல்), ஊதியம்= பயன், சிறப்பு, |
| | வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய<br>வாழ்வாரே வாழா தவர். (57/240) | வசைஒழிய=பழியின்றி, இசைஒழிய= புகழின்றி |
| அருள் உடைமை | அருள்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருள்செல்வம்<br>பூரியார் கண்ணும் உள. (58/241) | அருள்= அன்பின்கனிவு, பூரியார்=இழிந்தவர், |

# ஒரே நாளில் 300 திருக்குறளை அறிதல்

அ

**படிநிலை 2. பக்கம் 05**

| | | |
|---|---|---|
| அருள் உடைமை | வலியார்முன் தன்னை நினைக்க தான் தன்னின்<br>மெலியார்மேல் செல்லும் இடத்து. (59/250) | தன்னின்= தன்னைவிட,<br>மெலியார்= மெலிந்தவர்,<br>செல்லும்=வருத்தச் செல்லும் |
| புலால் உணவைத் தவிர்த்தல் | அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்<br>உயிர் செகுத்து உண்ணாமை நன்று. (60/259) | அவி= நெய்,<br>வேட்டல்=வேள்வி,<br>செகுத்து= பிரித்து. |
| | கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி<br>எல்லா உயிரும் தொழும். (61/260) | புலால்=ஊன் உணவு,<br>(அசைவ உணவு) |
| வாழ்வாங்கு வாழ்வதே தவம் | உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை<br>அற்றே தவத்திற்கு உரு. (62/261) | நோன்றல்=பொறுத்தல்,<br>உறுகண்=துன்பம்,<br>அற்றே=அதுவே, உரு=<br>உருவம், வடிவம், |
| | தவம் செய்வார் தம் கருமம் செய்வார் மற்று அல்லார் அவம்<br>செய்வார் ஆசையுள் பட்டு. (63/266) | கருமம்= வேலை,<br>அவம்= தவம்<br>அல்லாதது, |
| ஏமாற்றுபவரை அறிந்து ஏமாறாமல் இருத்தல் | வலிஇல் நிலைமையான் வல் உருவம் பெற்றம்<br>புலியின் தோல் போர்த்து மேய்ந்து அற்று. (64/273) | வலிஇல்= வலிமை<br>இல்லாத, வல்= வலிமை<br>பெற்றம்=பசுமாடு, |
| | கணை கொடிது யாழ் கோடு செவ்விது ஆங்குஅன்ன<br>வினைபடு பாலால் கொளல். (65/279) | கணை= அம்பு, கோடு=<br>வளைந்தது, செவ்விது=<br>நல்லது, வினைபடுபால்=<br>செயல்படும் தன்மை, |
| | மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்<br>பழித்தது ஒழித்து விடின். (66/280) | மழித்தல்= மயிர்<br>நீக்குதல், நீட்டல்= மயிர்<br>வளர்த்தல் |
| திருடும் எண்ணத்தை விட்டு விடுதல் | உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக் கள்ளத்தால்<br>கள்வேம் எனல். (67/282) | உள்ளல்= நினைத்தல்,<br>கள்ளத்தால்= வஞ்சத்தால்,<br>கள்வேம்= திருடுதல், |
| | களவினால் ஆகிய ஆக்கம் அளவு இறந்து<br>ஆவது போலக் கெடும். (68/283) | ஆக்கம்= உயர்வு,<br>இறந்து= கடந்து, |
| உண்மையின் ஆற்றலை அறிதல் (வாய்மை) | வாய்மை எனப்படுவது யாதுஎனின் யாதுஒன்றும்<br>தீமை இலாத சொலல். (69/291) | வாய்மை= உண்மை,<br>தீமை= கெடுத்தல், |
| | பொய்மையும் வாய்மை இடத்த புரை தீர்ந்த<br>நன்மை பயக்கும் எனின். (70/292) | புரை= குற்றம், தீர்ந்த=<br>நீங்கிய, பயக்கும்=<br>கொடுக்கும், |
| | தன் நெஞ்சு அறிவது பொய் அற்க பொய்த்தபின் தன்<br>நெஞ்சே தன்னைச் சுடும். (71/293) | அறிவது= அறிந்து,<br>அற்க= விட்டுவிடுக, |
| | எல்லா விளக்கும் விளக்கு அல்ல சான்றோர்க்குப்<br>பொய்யா விளக்கே விளக்கு. (72/299) | சான்றோர்= பிறர் சான்று<br>காட்டத் தக்கவாறு<br>நிறை பண்புகளுடன்<br>வாழ்வோர், |
| வெகுளாமை | செல்இடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்இடத்துக்<br>காக்கின் என் காவாக்கால் என். (73/301) | செல்இடத்து= எதிர்த்துப்<br>பேசாதவரிடத்தில்,<br>அல்இடத்து= எதிர்ப்பவர்<br>இடத்தில் |

## படிநிலை 2. பக்கம் 06

| | | |
|---|---|---|
| (வெகுளாமை)கோபத்தைக் கைவிடுதல் | தன்னைத்தான் காக்கின் சினம் காக்க காவாக்கால்<br>தன்னையே கொல்லும் சினம். (74/305) | காக்கின்= காப்பாற்ற நினைத்தால், காக்க= அடக்குக, காவாக்கால்= அடக்காவிட்டால் |
| | உள்ளியது எல்லாம் உடன் எய்தும் உள்ளத்தால்<br>உள்ளான் வெகுளி எனின். (75/309) | உள்ளியது= நினைத்தது, எய்தும்= கிடைக்கும், உள்ளான்= நினையான், வெகுளி= சினம். |
| பிறருக்குத் துன்பம் செய்யாமலிருத்தல் | இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண<br>நல் நயம் செய்து விடல். (76/314) | ஒறுத்தல்= தண்டித்தல், நாண= வெட்கும்படி, நல்நயம்= அன்பானசெயல் |
| | அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின் நோய்<br>தன்நோய் போல் போற்றாக் கடை. (77/315) | பிறிதின்= பிற உயிரியின், போற்றாக்கடை= நினைக்காத பொழுதில், |
| உயிர்க்கொலையைத் தவிர்த்தல் | பகுத்து உண்டு பல் உயிர் ஓம்புதல் நூலோர்<br>தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. (78/322) | பகுத்து= பங்கிட்டு, ஓம்புதல்= பாதுகாத்தல், தொகுத்தவை= தொகுத்த அறங்கள், தலை= மேன்மை |
| | தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான் பிறிது<br>இன்னுயிர் நீக்கும் வினை. (79/327) | நீப்பினும்= போனாலும், வினை= செயல், |
| நிலைத்திருப்பது எதுவுமில்லை | நெருநல் உளன் ஒருவன் இன்றுஇல்லை என்னும்<br>பெருமை உடைத்து இவ்வுலகு. (80/336) | நெருநல்= நேற்று, உளன்= உள்ளவன், |
| | உறங்குவது போலும் சாக்காடு உறங்கி<br>விழிப்பது போலும் பிறப்பு. (81/339) | சாக்காடு= இறப்பு, |
| (துறவு) துன்புறுத்தும் பற்றுகளை விட்டுவிடுதல் | யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்<br>அதனின் அதனின் இலன் (82/341) | யாதனின்= எதனினின்றும், நோதல்= துன்பம், அதனின்=அப்பொருளால், |
| | யான் எனது என்னும் செருக்குஅறுப்பான் வானோர்க்கு<br>உயர்ந்த உலகம் புகும். (83/346) | செருக்கு= ஆணவம், அறுப்பான்= நீக்குபவன், வானோர்க்குஉயர்ந்த= எதற்கும் மேலான |
| | பற்றுக பற்று அற்றான் பற்றினை அப் பற்றைப்<br>பற்றுக பற்று விடற்கு. (84/350) | பற்றுக= பிடித்துக்கொள், பற்று= உலகஆசை/ பிடி/ அன்பு, பற்றற்றான்= ஆசையை நீக்கியவன், விடற்கு=விடுவதற்கு |
| (மெய்உணர்தல்) உண்மையை உணர்தல் | இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள் நீங்கி<br>மாசு அறு காட்சி அவர்க்கு. (85/352) | மருள்= மனதில்தோன்றும் இருள், மாசுஅறு= குற்றம் அற்ற, காட்சியவர்= அறிவுடையவர் |
| | காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்<br>நாமம் கெடக் கெடும் நோய். (86/360) | நாமம்= ஆரவாரிக்கும் தன்மை, கெடும்நோய்= மெய் உணராத் தன்மை கெடும், |
| அவா அறுத்தல் | அற்றவர் என்பார் அவா அற்றார் மற்றையார்<br>அற்றாக அற்றது இலர். (87/365) | அற்றவர்= பற்று அற்றவர், அவா= வீணான ஆசைகள், அற்றாக= முழுமையாக, அற்றது= பற்றுஅற்றநிலை |
| ஊழ் | இரு வேறு உலகத்து இயற்கை திரு வேறு<br>தெள்ளியர் ஆதலும் வேறு. (88/374) | திரு= செல்வம், தெள்ளியர்= தெளிந்தவர் |

| | | |
|---|---|---|
| (இறை மாட்சி) அரசின் தகுதி கூறுதல் | படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்<br>உடையான் அரசருள் ஏறு. (89/381) | கூழ்= உணவு, அரண்= பாதுகாப்பு, ஏறு= சிங்கம், |
| | அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந் நான்கும்<br>எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு. (90/382) | ஈகை= கொடை, ஊக்கம்= முயற்சி, எஞ்சாமை= குறையாமல், |
| | தூங்காமை கல்வி துணிவுஉடைமை இம் மூன்றும்<br>நீங்கா நிலன் ஆள்பவர்க்கு. (91/383) | தூங்காமை= காலம் தாழ்த்தாமை, நீங்கா= நீங்காது, நிலன்= நிலத்தை, |
| | இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த<br>வகுத்தலும் வல்லது அரசு. (92/385) | இயற்றல்=உண்டாக்கல், ஈட்டல்= பொருளைச் சேர்த்தல், வகுத்தல்= பகுத்தல் |
| (கல்வி) அறியாதவற்றை நுட்பமாக அறிதல் | கற்க கசடு அறக் கற்பவை கற்ற பின்<br>நிற்க அதற்குத் தக. (93/391) | கசடுஅற= பிழையற்று, நிற்க= நடை முறைப் படுத்து, |
| | எண் என்ப ஏனை எழுத்து என்ப இவ்விரண்டும்<br>கண் என்ப வாழும் உயிர்க்கு. (94/392) | எண்=கணித அறிவு, ஏனை= மற்றும், எழுத்து= மொழியறிவு, |
| | தொட்டுஅனைத்து ஊறும் மணல் கேணி மாந்தர்க்குக் கற்று<br>அனைத்து ஊறும் அறிவு. (95/396) | தொட்டு= தொட்டுத் தோண்ட, கேணி= கிணறு |
| (கல்லாமை) அறியாமையின் இழிவு கூறுதல் | நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில் நலம்<br>மண்மாண் புனை பாவை யற்று. (96/407) | நுண்= நுட்பமான, மாண்= மாட்சிமை, நுழைபுலம்= ஆராய்ச்சி,புனை=செய்த,பாவை= பொம்மை |
| | நல்லார் கண் பட்ட வறுமையின் இன்னாதே<br>கல்லார் கண் பட்ட திரு. (97/408) | நல்லார்= நல்லவர், இன்னாதே=கொடியது, |
| | விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்<br>கற்றாரோடு ஏனை யவர். (98/410) | அனையர்= வேறுபாட்டை உடையவர், இலங்கு= மேலான, |
| (கேள்வி) கேட்கும் உணர்வின் சிறப்பு | செவிக்கு உணவு இல்லாத போழ்து சிறிது<br>வயிற்றுக்கும் ஈயப் படும். (99/412) | போழ்து = பொழுது, ஈய= கொடுக்க, |
| | எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்<br>ஆன்ற பெருமை தரும். (100/416) | எனைத்தானும்= எத்தனை சிறியது ஆயினும், ஆன்ற= நிறைந்த |
| அறிவு உடைமை | அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்<br>என் உடையரேனும் இலர். (101/430) | என்உடையர்= எத்தனை உடைமைகள் இருந்தாலும், இலர்= இல்லாதவரே |
| (குற்றம் கடிதல்) குற்றம் நீக்கி வாழுதல் | வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரி முன்னர்<br>வைத்தூறு போலக் கெடும். (102/435) | காவாதான்= காத்துக் கொள்ளாதவன், எரி= நெருப்பு, வைத்தூறு= வைக்கோல் போர், |
| | தன் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கின் பின்<br>என் குற்றம் ஆகும் இறைக்கு. (103/436) | இறை= மன்னவன், |
| | வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க<br>நன்றி பயவா வினை. (104/439) | வியவற்க= புகழ்ந்து கொள்ள வேண்டாம், எஞ்ஞான்றும்= எப்பொழுதும், நயவற்க= விரும்பவேண்டாம், நன்றி பயவா= நன்மை தராத, |

| | | |
|---|---|---|
| (பெரியாரைத் துணைகோடல்) அறிந்தாரைத் துணையாக்குதல் | அறன் அறிந்து மூத்த அறிவு உடையார் கேண்மை<br>திறன் அறிந்து தேர்ந்து கொளல். (105/441) | அறன்= நற்செயல், கேண்மை= நட்பு, திறன் அறிந்து= ஆராய்ந்து அறிந்து, தேர்ந்து= ஆராய்ந்து |
| | இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்<br>கெடுப்பார் இலானும் கெடும். (106/448) | இடிப்பாரை= தட்டிக் கேட்பவரை, ஏமரா= காவலற்ற, இலானும்= இல்லா விட்டாலும் |
| | பல்லார் பகை கொளலின் பத்து அடுத்த தீமைத்தே<br>நல்லார் தொடர் கைவிடல். (107/450) | பல்லார்= பலர், பத்துஅடுத்த= பத்துமடங்கு, தீமைத்தே= தீமைதருவது, தொடர்= தொடர்பு |
| சிறுமைக்குணமுடை யோரைத்தவிர்த்தல் | மனம் தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்<br>இனம் தூய்மை தூவா வரும். (108/455) | இனம்= மக்கள் கூட்டம், தூவா= பற்றுக்கோடாக, |
| | மன நலம் மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம்<br>எல்லாப் புகழும் தரும். (109/457) | மன்னுயிர்= உலகமாந்தர், ஆக்கம்= உயர்வு, |
| (தெரிந்து செயல்வகை) ஆராய்ந்து அறிந்துசெயல்படுதல் | செய் தக்க அல்ல செயக் கெடும் செய் தக்க<br>செய்யாமை யானும் கெடும். (110/466) | செய்தக்க= செய்ய வேண்டிய, அல்ல= அல்லது, செய்யாமை= செய்யாமலிருந்தாலும் |
| | எண்ணித் துணிக கருமம் துணிந்த பின்<br>எண்ணுவம் என்பது இழுக்கு. (111/467) | எண்ணி= நன்கு ஆராய்ந்து, துணிக= முடிவு செய்க, கருமம்= செயல், இழுக்கு= இழிவு/ தவறு, |
| | நன்று ஆற்றல்உள்ளும் தவறுஉண்டு அவர்அவர்<br>பண்பு அறிந்து ஆற்றாக் கடை. (112/469) | ஆற்றல்உள்ளும்= செய்வதிலும், |
| (வலிஅறிதல்) தன் வலிமையை அறிந்து செயல்படுதல் | வினை வலியும் தன் வலியும் மாற்றான் வலியும்<br>துணை வலியும் தூக்கிச் செயல். (113/471) | வினை= செயல், வலி= வலிமை, தன்= தனது, மாற்றான்= எதிரி, துணை= நட்பு, தூக்கி= ஆராய்ந்து, |
| | நுனிக் கொம்பர் ஏறினார் அஃது இறந்து ஊக்கின்<br>உயிர்க்கு இறுதி ஆகி விடும். (114/476) | கொம்பர்= மரக்கொம்பு, இறந்து= கடந்து, ஊக்கின்= முயன்றால்/ ஊக்கப் படுத்தினால், |
| | அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல<br>இல்லாகித் தோன்றாக் கெடும். (115/479) | உளபோல= உள்ளது போல, இல்லாகி= இல்லாததாகி, தோன்றா= காணாமல் போய், |
| (காலம் அறிதல்) காலத்தின் அருமையை உணர்ந்து நடத்தல் | பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்<br>தீராமை ஆர்க்கும் கயிறு. (116/482) | ஒட்ட= பொருந்துமாறு, ஒழுகல்= நடத்தல், திரு= செல்வம், ஆர்க்கும்= கட்டும் |
| | ஞாலம் கருதினும் கை கூடும் காலம்<br>கருதி இடத்தால் செயின். (117/484) | ஞாலம்= உலகம், காலம்= ஏற்ற காலத்தை இடம்= சரியான இடத்தில் |
| | காலம் கருதி இருப்பர் கலங்காது<br>ஞாலம் கருது பவர். (118/485) | கலங்காது= வருத்தப்படாது |
| | கொக்கு ஒக்க கூம்பும் பருவத்து மற்று அதன்<br>குத்து ஒக்க சீர்த்த இடத்து. (119/490) | ஒக்க= போல, கூம்பும்= குவியும், (வாய்மூடி) சீர்த்தஇடத்து= காலம் வாய்த்த பொழுது, |

| | | |
|---|---|---|
| (இடன் அறிதல்) சரியான இடத்தை உணர்ந்து செயல்படுதல் | எண்ணியார் எண்ணம் இழப்பர் இடன் அறிந்து<br>துன்னியார் துன்னிச் செயின். (120/494) | எண்ணியார்= எதிரி, துன்னியார்= நெருங்கிப் பழகியவர், துன்னி= நெருங்கி, |
| | நெடும் புனலுள் வெல்லும் முதலை<br>அடும் புனலின் நீங்கின் அதனைப் பிற. (121/495) | நெடும்= ஆழமான, புனல்= நீர்நிலை, அடும்= வெல்லும், |
| | அஞ்சாமை அல்லால் துணை வேண்டா எஞ்சாமை<br>எண்ணி இடத்தால் செயின். (122/497) | அல்லால்= அல்லாமல், எஞ்சாமை= குறைவில்லாமல், |
| (தெரிந்து தெளிதல்) நுட்பமாக ஆராய்ந்து தேர்வு செய்தல் | குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்<br>மிகை நாடி மிக்க கொளல். (123/504) | நாடி= ஆராய்ந்து, மிகை= மிகுதி, மிக்க= அதிகமானவை, கொளல்= கொள்ள வேண்டும் |
| | பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்<br>கருமமே கட்டளைக் கல். (124/505) | கருமம்= செயல், கட்டளைக்கல்= உரைகல், |
| | தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்<br>தீரா இடும்பை தரும். (125/510) | தேரான்= ஆராயாதவன், ஐயுறவு= ஐயப்பாடு (சந்தேகம்), |
| நுட்பமாக அறிந்து வேலை வாங்குதல் | நன்மையும் தீமையும் நாடி நலம் புரிந்த<br>தன்மையான் ஆளப் படும். (126/511) | நலம்= நன்மை, தன்மையான்= தன்மை உடையவன், ஆளப்படும்= அனுப்பப் படுவான், |
| | இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து<br>அதனை அவன் கண் விடல். (127/517) | இதனை= இந்த வேலையை, விடல்= ஒப்படைத்தல், |
| சுற்றத்தாரைப் பேணும் வழிமுறைகள் | பற்றுஅற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல்<br>சுற்றத்தார் கண்ணே உள. (128/521) | பற்று= செல்வம், பழைமை= முன்பு பழகிய நட்பு, சுற்றத்தார்= உறவினர், |
| | காக்கை கரவா கரைந்து உண்ணும் ஆக்கமும்<br>அன்ன நீரார்க்கே உள. (129/527) | கரவா= மறைக்காமல், கரைந்து= கூவி அழைத்து, ஆக்கமும்= செல்வப் பெருக்கமும், நீரார்= இயல்புடையவர், |
| (பொச்சாவாமை) மகிழ்ச்சியில் மறதி பொச்சாப்பு (மகிழ்விலும் விழிப்புணர்வு) | புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும் செய்யாது<br>இகழ்ந்தார்க்கு எழுமையும் இல். (130/538) | புகழ்ந்தவை= நீதிநூல் புகழ்ந்வை, எழுமையும்= ஏழுதலைமுறைக்கும், இல்= (நன்மை) இல்லை |
| | இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம் தம்<br>மகிழ்ச்சியில் மைந்துறும் போழ்து. (131/539) | இகழ்ச்சி= மகிழ்ச்சியால் செயலை மறத்தல், உள்ளுக= எண்ணுக, மைந்து= வலிமை, உறும்போழ்து= அடையும் பொழுது |
| | உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும் தான்<br>உள்ளியது உள்ளப் பெறின். (132/540) | உள்ளியது= நினைத்தது, எய்தல்= அடைதல், எளிதுமன்= எளிதாகும், உள்ள= உள்ளத்தில், பெறின்= பெற்றால் |
| (செங்கோன்மை) நேர்மையான ஆட்சி | வான்நோக்கி வாழும் உலகு எல்லாம் மன்னவன்<br>கோல் நோக்கி வாழும் குடி. (133/542) | வான்நோக்கி= மழையை பார்த்து, கோல்= செங்கோல், குடி= குடிமக்கள், |
| | கொலையில் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ்<br>களை கட்டு அதனொடு நேர். (134/550) | வேந்து= அரசன், ஒறுத்தல்= தண்டித்தல், பைங்கூழ்= பசிய பயிர், களைகட்டு= களை நீக்குதல், |

| | | |
|---|---|---|
| (கொடுங்கோன்மை) நேர்மையற்றஆட்சி | வேலொடு நின்றான் இடு என்றது போலும்<br>கோலொடு நின்றான் இரவு. (135/552) | வேலொடுநின்றான்= கள்வன், இடு= கொடு, கோல்= செங்கோல், இரவு= பொருள் பெறல், |
| | அல்லல் பட்டு ஆற்றாது அழுத கண்ணீர்அன்றே<br>செல்வத்தைத் தேய்க்கும் படை. (136/555) | அல்லல்= துன்பம், ஆற்றாது= பொறுக்க முடியாது, தேய்க்கும்= அழிக்கும், |
| அடக்குமுறைகளைக் கையாளாமல்இருத்தல் | கடிதுஓச்சி மெல்ல எறிக நெடிது ஆக்கம்<br>நீங்காமை வேண்டு பவர். (137/562) | கடிதுஓச்சி= கடுமையாகத் தொடங்கி, எறிக= தண்டிக்க, நெடிது= நீண்ட; |
| | கடும்சொல்லன் கண்இலன் ஆயின் நெடும்செல்வம்<br>நீடுஇன்றி ஆங்கே கெடும். (138/566) | கண்இலன்= இரக்கம் இல்லாதவன், நீடுஇன்றி= நிலைத்தல் இன்றி, |
| (கண்ணோட்டம்) கண்ணிலுள்ளஇரக்கம் | கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு<br>உரிமை உடைத்து இவ்வுலகு. (139/578) | கண்ணோட்டம்= அருள், |
| | பெயக்கண்டும் நஞ்சுஉண்டு அமைவர் நயத்தக்க<br>நாகரிகம் வேண்டு பவர். (140/580) | பெயக்கண்டும்= இடப் பார்த்தும், அமைவர்= பழகுவார்கள் |
| (ஒற்று ஆடல்) பிறர்அறியாதுஅறிவது | எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்<br>வல் அறிதல் வேந்தன் தொழில். (141/582) | எஞ்ஞான்றும்= எப்பொழுதும், வல்= விரைவாக |
| | வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றுஆங்கு<br>அனைவரையும் ஆராய்வது ஒற்று. (142/584) | என்றஆங்கு= என்பது போல |
| (ஊக்கமுடைமை) என்னால்முடியும்எனல் | உள்ளம் உடைமை உடைமை பொருள் உடைமை<br>நில்லாது நீங்கி விடும். (143/592) | உள்ளம்உடைமை= ஊக்கம் உடைமை, |
| | வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர் தம்<br>உள்ளத்து அனையது உயர்வு. (144/595) | வெள்ளத்து= நீர், அனைய= அளவுக்கேற்றபடி, மாந்தர்= மக்கள், உள்ளம்= ஊக்கம் |
| (மடியின்மை) சோம்பல் இல்லாமை | குடி என்னும் குன்றா விளக்கம் மடி என்னும்<br>மாசு ஊர மாய்ந்து கெடும். (145/601) | குடி= தான் பிறந்த குடி, குன்றாவிளக்கம்= அணையா விளக்கு, மடி= சோம்பல், மாசு ஊர= இருள் படிய, |
| | மடிமடிக் கொண்டு ஒழுகும் பேதை பிறந்த<br>குடிமடியும் தன்னினும் முந்து. (146/603) | மடிமடி= விடத்தக்க சோம்பல், குடிமடியும்= குடிஅழியும், |
| (ஆள்வினையுடைமை) முயற்சியின் பெருமை | முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை<br>புகுத்தி விடும். (147/616) | திருவினை= செல்வத்திற்கான செயல், முயற்றின்மை= முயற்சி இல்லாமை, இன்மை= (வறுமையை) இல்லாமை, |
| | தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சி தன்<br>மெய் வருத்தக் கூலி தரும். (148/619) | மெய்வருத்த= உடல் வருந்த, |
| இடுக்கண் அழியாமை | இடுக்கண் வருங்கால் நகுக அதனை<br>அடுத்து ஊர்வது அஃதொப்பது இல். (149/621) | இடுக்கண்= துன்பம், நகுக= வருந்தற்க, மகிழ்க, ஊர்வது= வரத்தக்கது, |

**(இடுக்கணழியாமை) துன்பம்கண்டு துவண்டுபோகாமை**

இன்பம் விழையான் இடும்பை இயல்பு என்பான்
துன்பம் உறுதல் இலன். (150/628)

> இடும்பை= துன்பம், விழையான்= விரும்பாதவன், உறுதல்= அடைதல்,

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன். (151/629)

> இன்பத்துள்= இன்பம் வந்தபொழுது,

**(அமைச்சு) அமைச் சருக்குரியபண்பு**

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல். (152/637)

> செயற்கை= செய்யத் தக்கவைகளை, கடைத்தும்= பொழுதும், இயற்கை= இயல்பு நடை,

முறைப்படச் சூழ்ந்தும் முடிவு இலவே செய்வர்
திறப்பாடு இலாஅத அவர். (153/640)

> சூழ்ந்து= ஆராய்ந்து, இலவே= இல்லாமல், திறப்பாடு= திறமை,

**(சொல்வன்மை) சொல்லின் வலிமை**

நாநலம் என்னும் நலன் உடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று. (154/641)

> நாநலம்= நாவன்மை, நலன்= நலம், யாநலத்து= எந்த நலத்திலும்,

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும் சொல் இன்மை அறிந்து. (155/645)

> பிறிதோர்= மற்றொரு,

**(வினைத்தூய்மை) பிழையற்று செய்தல்**

துணை நலம் ஆக்கம் தரூஉம் வினை நலம்
வேண்டிய எல்லாம் தரும். (156/651)

> துணைநலம்= துணையின் நன்மை, வினை= அவன் செய்கின்ற வினை,

ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. (157/656)

> ஈன்றாள்= பெற்றவள்,

**(வினைத்திட்பம்) செயல்களை நெஞ்சுறுதியுடன் செய்தல்**

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற. (158/661)

> திட்பம்= வலிமை,

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். (159/664)

> அரிய= அரிதானது, செயல்= செய்தல்,

எண்ணிய எண்ணியஆங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின். (160/666)

> எண்ணிய= நினைத்த, எண்ணியஆங்கு= நினைத்தபடி, எய்து= அடைதல், திண்ணியர்= மன உறுதி உடையவர்,

**(வினைசெயல்வகை) முறையாகச் செய்தல்**

ஒல்லும் வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும் வாய் நோக்கிச் செயல். (161/673)

> ஒல்லும்= இயலும், வாய்= வழி, செல்லும்= இயல்பாக முடியும்,

முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். (162/676)

> முடிவும்= முடிப்பதற்கான முயற்சி, படுபயன்= உண்டாகின்ற பயன்,

**(தூது) தூது செல்வோர் பண்புகள்**

கடன் அறிந்து காலம் கருதி இடன் அறிந்து
எண்ணி உரைப்பான் தலை. (163/687)

> கடன்= கடமை, எண்ணி= ஆராய்ந்து, தலை= தூதரில் முதன்மையானவன்,

தூய்மை துணைமை துணிவுஉடைமை இம்மூன்றின்
வாய்மை வழி உரைப்பான் பண்பு. (164/688)

> துணைமை= துணையிருக்கும் தன்மை, வழி உரைப்பான்= தூது சொல்பவன்,

| | | |
|---|---|---|
| (மன்னரைச்சேர்ந்தொழுகல்) ஆள்வோருடனான அணுகுமுறை | அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க<br>இகல் வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார். (165/691) | அகலாது= அகலாமல், இகல்= வேறுபாடு, வேந்தர்= அரசர், ஒழுகுவார்= நடப்பவர்கள் |
| | மன்னர் விழைப விழையாமை மன்னரால்<br>மன்னிய ஆக்கம் தரும். (166/692) | விழைப= விரும்புவன, விழையாமை= விரும்பாமை, மன்னிய= நிலை பெற்ற, |
| (குறிப்பறிதல்) முகத்தின் குறிப்பால் அகத்தை அறிதல் | குறிப்பில் குறிப்பு உணராஆயின் உறுப்பினுள்<br>என்ன பயத்தவோ கண். (167/705) | குறிப்பு= கருத்தில் குறித்ததை முகக் குறிப்பால் உணர்ந்து, உணரா= உணரமுடியாது, ஆயின் = ஆனால் |
| | அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம்<br>கடுத்தது காட்டும் முகம். (168/706) | அடுத்தது= அடுத்துள்ள பொருளை, கடுத்தது= மிகுந்துள்ளது, |
| | நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்<br>கண்ணல்லது இல்லை பிற. (169/710) | நுண்ணியம்= நுட்பமான அறிவுடைய |
| அவையிலுள்ளோர் இயல்பறிந்து பேசுதல் | அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்<br>தொகை அறிந்த தூய்மை அவர். (170/711) | அவை= சபை, தொகை= தொகுப்பு, தூய்மை அவர்= தூயதன்மை உடையவர், |
| | கற்று அறிந்தார் கல்வி விளங்கும் கசடறச் சொல்<br>தெரிதல் வல்லார் அகத்து. (171/717) | கசடற= பிழையில்லாத, சொல்= மொழி, அகத்து= அவையில், |
| அவைக்கு அஞ்சாது கருத்துரைத்தல் | பல்லவை கற்றும் பயமிலரே நல் அவையுள்<br>நன்கு செலச் சொல்லாதார். (172/728) | பல்லவை= பலநூல்கள், பயமிலர்= அஞ்சாதவர், நன்கு= நன்றாக, செல= மனம் கொள்ள. |
| | கல்லாதவரிற் கடை என்ப கற்று அறிந்தும்<br>நல்லார் அவை அஞ்சுவார். (173/729) | கடை என்ப= கடையவர் (இழிந்தவர்) என்ப, |
| (நாடு) நல்ல நாட்டின் தன்மைகள் | உறு பசியும் ஓவாப் பிணியும் செறு பகையும்<br>சேராது இயல்வது நாடு. (174/734) | உறு= பெரிய, ஓவா= நீங்காத, செறுபகை= அழிக்கின்ற பகை, சேராது= சேராமல், |
| | பிணி இன்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்<br>அணி என்ப நாட்டிற்கு இவ் ஐந்து. (175/738) | பிணி= நோய், ஏமம்= காவல், அணி= அணிகலன் (அழகு) |
| (அரண்) பாதுகாப்பின் அருமை | மணி நீரும் மண்ணும் மலையும் அணி நிழல்<br>காடும் உடையது அரண். (176/742) | மணிநீர்= தெளிந்த நீர், அரண்= பாதுகாப்பு. |
| | எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்து உதவும்<br>நல்லாள் உடையது அரண். (177/746) | இடத்து= சரியானநேரத்தில், நல்லாள்= நல்ல வீரர்கள், |
| பொருள் செயல்வகை செல்வத்தின் அருமை | பொருள்என்னும் பொய்யாவிளக்கம் இருள்அறுக்கும்<br>எண்ணிய தேயத்துச் சென்று. (178/753) | பொய்யா= அணையாத, விளக்கம்= விளக்கு, தேயத்து= இடத்து, |
| | அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து<br>தீது இன்றி வந்த பொருள். (179/754) | திறன் அறிந்து= ஈட்டும் வகை அறிந்து, பொருள்= செல்வம், |

| | | |
|---|---|---|
| பொருள் செயல்வகை செல்வத்தின் அருமை | அருள்என்னும் அன்புஈன் குழவி பொருள்என்னும்<br>செல்வச் செவிலியால் உண்டு. (180/757) | குழவி= குழந்தை, உண்டு= வளரும், செவிலி= வளர்ப்புத்தாய், |
| | குன்றுஏறி யானைப்போர் கண்டு அற்றால் தன்கைத்து ஒன்று<br>உண்டுஆகச் செய்வான் வினை. (181/758) | கைத்து= கைப்பொருள், உண்டுஆக= உருவாக்க, |
| (படை மாட்சி) படையின் உயர்வு | கூற்று உடன்று மேல்வரினும் கூடி எதிர் நிற்கும்<br>ஆற்றல் அதுவே படை. (182/765) | கூற்று=எமன், உடன்று= சினந்து, |
| | அடல் தகையும் ஆற்றலும் இல்எனினும் தானை<br>படைத் தகையால் பாடு பெறும். (183/768) | அடல்= தாக்குதல், தகை= தகுதி, ஆற்றல்= வலிமை, படைத்தகை= தோற்றப் பொலிவால், பாடு= பெருமை |
| | சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்<br>இல் ஆயின் வெல்லும் படை. (184/769) | சிறுமை= சிறிதாகக் தேய்தல், செல்லாத= நீங்காத, துனி=வெறுப்பு |
| (படைச்செருக்கு) படையின் நெஞ்சுரம் | கானமுயல் எய்த அம்பினில் யானை<br>பிழைத்த வேல் ஏந்தல் இனிது. (185/772) | கான= கானகம், பிழைத்த= தவறிய, ஏந்தல்= தாங்குதல், |
| | புரந்தார் கண்நீர் மல்கச் சாகின் பின் சாக்காடு<br>இரந்து கோள் தக்கது உடைத்து. (186/780) | புரந்தார்= காப்பாற்றியவர், சாக்காடு= சாவு, இரந்து= பிச்சைஎடுத்தாவது. கோள் தக்கது= கொள்ளத்தக்கது |
| (நட்பு) நட்பின் இலக்கணம் கூறுதல் | நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்<br>பண்புடையாளர் தொடர்பு. (187/783) | நவில்= சொல்லுதல், நூல்நயம்= நூலின் நற்பொருள் பயில்= பழகுதல், |
| | உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே<br>இடுக்கண் களைவது ஆம் நட்பு. (188/788) | உடுக்கை= உடை, இடுக்கண்= துன்பம், |
| (நட்பாராய்தல்) நல்ல நண்பர்களைத் தேர்வுசெய்தல் | குடிப்பிறந்து தன்கண் பழி நாணுவானைக்<br>கொடுத்தும் கொளல் வேண்டும் நட்பு. (189/794) | குடி= நல்லகுடியில், தன்கண்= தன்னிடத்தே, பழிநாணுவான்= பழி அஞ்சுவான், கொளல்= கொள்ள, |
| | கேட்டினும் உண்டு ஓர் உறுதி கிளைஞரை<br>நீட்டி அளப்பது ஓர் கோல். (190/796) | கேட்டினும்=தீமையிலும்,கிளைஞர்= நண்பர், நீட்டி= நீளமாக்கி, கோல்= அளவுகோல் |
| பழைமை | அழிவந்த செய்யினும் அன்புஅறார் அன்பின்<br>வழிவந்த கேண்மை அவர். (191/807) | அழிவந்த= அழிவு வந்தவை, கேண்மை= நட்பு |
| (தீ நட்பு) தீய நண்பர்களைத் தவிர்த்தல் | நகை வகையர் ஆகிய நட்பின் பகைவரால்<br>பத்து அடுத்த கோடி உறும் (192/817) | நகை= சிரிப்பு, பத்து அடுத்த கோடி= பத்துக் கோடி |
| | கனவினும் இன்னாது மன்னோ வினை வேறு<br>சொல் வேறு பட்டார் தொடர்பு. (193/819) | கனவினும்= கனவில் கூட, இன்னாது= துன்பம் தருவதாகும், |
| கூடா நட்பு | பல நல்ல கற்றக் கடைத்தும் மன நல்லர்<br>ஆகுதல் மாணார்க்கு அரிது. (194/823) | நல்ல= நல்ல நூல்களை, கடைத்தும்= பொழுதும், மாணார்க்கு= பெருமை |

| | | |
|---|---|---|
| (கூடா நட்பு) விலக்க வேண்டிய நட்பு | நட்டார் போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்<br>சொல் ஒல்லை உணரப் படும். (195/826) | நட்டார்= நண்பர், ஒட்டார்= பகைவர், ஒல்லை= விரைவில், |
| | தொழுத கை உள்ளும் படை ஒடுங்கும் ஒன்னார்<br>அழுத கண்ணீரும் அனைத்து. (196/828) | படை= படைக்கலம், ஒடுங்கும்= ஒடுங்கி இருக்கும், ஒன்னார்= பகைவர், அனைத்து= அத்தன்மையது, |
| (பேதைமை) அறியாமையின் தன்மை | பேதைமை என்பதுஒன்று யாதுஎனின் ஏதம்கொண்டு<br>ஊதியம் போக விடல். (197/831) | பேதமை= அறியாமை, ஏதம்= கேடு, ஊதியம்= பயன்/ வருவாய் |
| | ஓதிஉணர்ந்தும் பிறர்க்குஉரைத்தும் தான்அடங்காப்<br>பேதையின் பேதையார் இல். (198/834) | ஓதி= கற்று, அடங்கா= அடங்கி நடக்காத, பேதையார்= அறிவில்லாதவர், |
| | பெரிது இனிது பேதையார்கேண்மை பிரிவின்கண்<br>பீழை தருவது ஒன்று இல். (199/839) | கேண்மை= நட்பு, பீழை= வருத்தம், |
| (புல்லறிவு ஆண்மை) சிறிய அறிவினும் செருக்கோடு திரிபது | அறிவுஇன்மை இன்மையுள் இன்மை பிறிதுஇன்மை<br>இன்மையா வையாது உலகு. (200/841) | இன்மை= இல்லாமை/ துன்பம், பிறிதுஇன்மை= வறுமை, வையாது= வைக்காது, இன்மையா= இல்லாமையாக, |
| | கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற<br>வல்லதூஉம் ஐயம் தரும். (201/845) | கல்லாத= கற்காத, ஒழுகல்= நடத்தல், வல்லதூஉம்= கற்றதிலும், ஐயம்= சந்தேகம், |
| | ஏவவும் செய்கலான் தான் தேறான் அவ்வுயிர்<br>போஒம் அளவு ஓர் நோய். (202/848) | ஏவவும்= சொல்லவும், தேறான்= அறியான், போஒம்= போகுமளவும் |
| (இகல்) ஒட்டாமல் வேறுபடும் உணர்வு | இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகல்என்னும்<br>பண்பு இன்மை பாரிக்கும் நோய். (203/851) | இகல்= மாறுபாடு, பகல்= வேறுபடுகிற தன்மை, பாரிக்கும்= வளர்க்கும், |
| | இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல் என்னும்<br>துன்பத்துள் துன்பம் கெடின். (204/854) | பயக்கும்= கொடுக்கும், |
| (பகை மாட்சி) பகையின் தன்மை | அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்<br>தஞ்சம் எளியன் பகைக்கு. (205/863) | அஞ்சும்= அஞ்சுபவன், அறியான்= அறிய விரும்பாதவன், அமைவிலன்= பொருந்தாதவன், தஞ்சம்= எளிமை, எளியன்= எளிமை உடையவன், |
| | நீங்கான் வெகுளி நிறை இலன் எஞ்ஞான்றும்<br>யாங்கணும் யார்க்கும் எளிது. (206/864) | வெகுளி= கோபம், நிறை= நல்லதன்மை, எஞ்ஞான்றும்= எப்பொழுதும் |
| (பகைத்திறம் தெளிதல்) பகைவரின் ஆற்றல் அறிதல் | நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க<br>மென்மை பகைவர் அகத்து. (207/877) | நோவற்க= நோவைச் சொல்லாதிருக்க, நொந்தது= வருந்தியது, மேவற்க= மேற் கொள்ளாதுவிடுக |
| | இளைதாக முள் மரம் கொல்க களையுநர்<br>கை கொல்லும் காழ்த்த இடத்து. (208/879) | களையுநர்= வெட்டுபவர், கைகொல்லும்= கையை கிழிக்கும், காழ்த்த= வளர்ந்து மரமான, |
| உட்பகை | வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக<br>கேள்போல் பகைவர் தொடர்பு. (209/882) | வாள்= வாள்படை, கேள்= நண்பர், |

| | | |
|---|---|---|
| உட்பகை | உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்<br>பாம்போடு உடன் உறைந்து அற்று. (210/890) | உடம்பாடு= உள்ளப் பொருத்தம்,குடங்கருள்= குடிசையில், உறைந்து= வாழ்ந்து, |
| பெரியாரைப் பிழையாமை | பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்<br>பேரா இடும்பை தரும். (211/892) | பேணாது= போற்றாமல், ஒழுகின்= நடந்தால், பேரா- நீங்காத |
| | ஏந்திய கொள்கையார் சீறின் இடை முரிந்து<br>வேந்தனும் வேந்து கெடும். (212/899) | ஏந்திய= உயர்ந்த, சீறின்= கோபம் கொண்டால், இடை= நடுவே, முரிந்து= கெட்டு, வேந்து= அரசன், |
| பெண்வழிச் சேறல் | இல்லாளை அஞ்சுவான் அஞ்சும் மற்று எஞ்ஞான்றும்<br>நல்லார்க்கு நல்ல செயல். (213/905) | இல்லாள்= மனைவி, அஞ்சும்= அஞ்சுகிறவன், |
| வரைவின் மகளிர் | இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்<br>திரு நீக்கப் பட்டார் தொடர்பு. (214/920) | கவறு= சூதாடுதல், திரு= செல்வம், தொடர்பு= நட்பு, |
| (கள் உண்ணாமை) குடிப் பழக்கத்தை நீக்குதல் | உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்<br>எண்ணப்பட வேண்டா தார். (215/922) | எண்ணப்பட= மதிக்கப்பட, |
| | துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்<br>நஞ்சு உண்பார் கள் உண்பவர். (216/926) | துஞ்சினார்= உறங்கியவர், வேறல்லர்= வேறானவர்களல்லர், |
| | கள்உண்ணாப் போழ்தில் களித்தானைக் காணும்கால்<br>உள்ளான் கொல் உண்டதன் சோர்வு. (217/930) | உண்ணாப்போழ்தில்= குடிக்காதசமயத்தில், உள்ளான்= எண்ண மாட்டான், சோர்வு= தளர்வு |
| (சூது) சூதாடுவதைத் தவிர்த்தல் | வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்<br>தூண்டில் பொன் மீன் விழுங்கி யற்று. (218/931) | வென்றதூஉம்= வென்றது என்பதும், |
| | ஒன்றுஎய்தி நூறுஇழக்கும் சூதர்க்கும் உண்டாம்கொல்<br>நன்றுஎய்தி வாழ்வது ஓர் ஆறு. (219/932) | எய்தி= பெற்று, சூதர்க்கு= சூதாடிக்கு, ஆறு= வழி |
| | பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்<br>கழகத்துக் காலை புகின். (220/937) | பழகிய= வாழ்வோடு இணைந்த, கழகம்= சூதாடும் இடம், காலை= காலம், |
| (மருந்து) மருந்தில்லாமல் வாழ்வதற்கான மருத்துவமுறை | அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறு அல்ல<br>துய்க்க துவரப் பசித்து. (221/944) | அற்றது= செரித்தது, மாறுஅல்ல= மாறுபாடில்லாத, துய்க்க= உண்க, துவர=மிகவும், |
| | மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின்<br>ஊறுபாடு இல்லை உயிர்க்கு. (222/945) | மாறுபாடு=வேறுபாடு, உண்டி= உணவு, ஊறுபாடு= துன்பம், |
| | தீயளவு இன்றித் தெரியான் பெரிது உண்ணின்<br>நோய் அளவு இன்றிப் படும். (223/947) | தீயளவு=பசியளவு படும்= அடையும் |
| | உற்றான் அளவும் பிணி அளவும் காலமும்<br>கற்றான் கருதிச் செயல். (224/949) | உற்றான்= நோயாளி, பிணி= நோய், காலம்= நோய்க்காலம், கற்றான்= மருத்துவர், |

| | | |
|---|---|---|
| (குடிமை) நல்ல குடிமக்களின் தன்மை | ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம் மூன்றும்<br>இழுக்கார் குடிப் பிறந்தார். (225/952) | நாணும்= பழியும், அஞ்சுதல், இழுக்கார்= தவறமாட்டார், |
| | அடுக்கிய கோடி பெறினும் குடிப் பிறந்தார்<br>குன்றுவ செய்தல் இலர். (226/954) | குன்றுவ= பெருமை இல்லாத செயல்கள், |
| (மானம்) நெஞ்சு நிமிர்ந்து வாழ வழிசெய்யும் உள்ளுணர்வு | சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு<br>பேராண்மை வேண்டு பவர். (227/962) | சீரினும்= புகழ்தேடும் பொழுது, சீரல்ல= சிறப்பு அற்றவை, சீர்= புகழ், பேராண்மை= மிக்க ஆண்மை, |
| | தலையின் இழிந்த மயிர் அனையர் மாந்தர்<br>நிலையின் இழிந்தக் கடை. (228/964) | இழிந்த= நீங்கிய, அனையர்= போன்றவர், நிலையின்= மானமாகிய நிலையின், கடை= காலம் |
| | மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்<br>உயிர் நீப்பர் மானம் வரின். (229/969) | நீப்பு= இழப்பு, கவரிமான்= ஒருவகைமான் |
| (பெருமை) உலகம் போற்றும் உயர்நிலை | பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா<br>செய் தொழில் வேற்றுமை யான். (230/972) | ஒக்கும்= சமமாகும், ஒவ்வா= சமம் ஆகா, |
| | பணியுமாம் என்றும் பெருமை சிறுமை<br>அணியுமாம் தன்னை வியந்து. (231/978) | சிறுமை= சிறியவர்கள், அணியுமாம்= புகழ்ந்து கொள்ளும், வியந்து= பாராட்டிக் கொண்டு, |
| (சான்றாண்மை) எடுத்துக் காட்டாகத் திகழும் ஆளுமைப் பண்பு | கொல்லா நலத்தது நோன்மை பிறர் தீமை<br>சொல்லா நலத்தது சால்பு. (232/984) | நலத்தது= நன்மை உடையது, நோன்மை= தவம், சால்பு= நிறைபண்பு, |
| | சால்பிற்குக் கட்டளை யாதுஎனின் தோல்வி<br>துலை அல்லார் கண்ணும் கொளல். (233/986) | சால்பு= பண்பு, கட்டளை= உரைகல், துலை= சமம், |
| | இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்<br>என்ன பயத்ததோ சால்பு. (234/987) | பயத்தது= பயனுடையது |
| பண்புடைமை | பண்புஇலான் பெற்ற பெரும்செல்வம் நன்பால்<br>கலம் தீமையால் திரிந் தற்று. (235/1000) | நன்பால்= நல்லபால், கலம்= பால்உள்ளஏனம் திரிந்தது= கெட்டது, |
| (நன்றியில் செல்வம்) பயன்படுத்தாமல் பதுக்கியது | கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்குஅடுக்கிய<br>கோடி உண்டாயினும் இல். (236/1005) | துய்ப்பதூஉம்= நுகர்வதும், இல்= எந்தப்பயனும் இல்லை |
| | நச்சப் படாதவன் செல்வம் நடு ஊருள்<br>நச்சு மரம் பழுத்தற்று. (237/1008) | நச்ச= விரும்ப, நச்சுமரம்= நச்சுத்தன்மை உடைய மரம், |
| | அன்பு ஒரீஇத் தற்செற்று அறன் நோக்காது ஈட்டிய<br>ஒண் பொருள் கொள்வார் பிறர். (238/1009) | ஒரீஇ= நீக்கி, தற்செற்று= தான் நுகராமல், ஒண்= சிறந்த, |
| நாண் உடைமை | ஊண் உடை எச்சம் உயிர்க்குஎல்லாம் வேறுஅல்ல<br>நாணுடைமை மாந்தர் சிறப்பு. (239/1012) | நாணுடைமை= பழிச் செயல்களுக்கு நாணுதல், மாந்தர்= மனிதர்களுடைய |

| | | |
|---|---|---|
| நாண் உடைமை | நாண்அகத்து இல்லார் இயக்கம் மரப்பாவை<br>நாணால் உயிர் மருட்டியற்று. (240/1020) | நாண்= நாணுதல், மரப் பாவை= மரப் பொம்மை, நாண்= கயிறு, மருட்டி யற்று= மயக்கினாற் போன்றது |
| (குடிசெயல்வகை) பொதுத் தொண்டு செய்தல் | ஆள்வினையும் ஆன்றஅறிவும் என இரண்டின்<br>நீள்வினையால் நீளும் குடி. (241/1022) | ஆள்வினை= முயற்சி, ஆன்ற= அகன்ற, நீள்வினை= தொடர் வினை, நீளும்= உயரும், |
| | குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்<br>மடிதற்றுத் தான் முந்து உறும். (242/1023) | குடிசெய்வல்= குடும்பத்தை மேன்மையாக்குவேன், மடிதற்று= ஆடையை இறுக்கிக் கட்டிக்கொண்டு, முந்துறும்= முற்பட்டுநிற்கும் |
| | நல்ஆண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த<br>இல்ஆண்மை ஆக்கிக் கொளல். (243/1126) | நல்ஆண்மை= நல்ல வீரத் தன்மை, இல்ஆண்மை= குடியை ஆளுந்தன்மை, |
| (உழவு) உழவுத் தொழிலின் மேன்மை | சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்<br>உழந்தும் உழவே தலை. (244/1031) | சுழன்றும்= சுழன்று திரிந்தும், உழந்தும்= துன்புற்றும், தலை= சிறந்தது, |
| | ஏரினும் நன்றால் எரு இடுதல் கட்டபின்<br>நீரினும் நன்று அதன் காப்பு. (245/1038) | கட்டபின்= களை எடுத்தபின், |
| (நல்குரவு) வறுமை | நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்<br>துன்பங்கள் சென்று படும். (246/1045) | நல்குரவு= வறுமை, இடும்பை= துன்பம், பல்குரை= பலவகை, |
| | நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்<br>யாது ஒன்றும் கண்பாடு அரிது. (247/1049) | துஞ்சல்= தூங்குதல், நிரப்பு= வறுமை, கண்பாடு= உறங்குதல், |
| (இரவு) பிச்சை எடுத்தல் | இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்<br>கனவிலும் தேற்றாதார் மாட்டு. (248/1054) | இரத்தல்= ஏற்றல், கரத்தல்= மறைத்தல், தேற்றாதார்= அறியாதார் |
| | இகழ்ந்து எள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்<br>உள்ளுள் உவப்பது உடைத்து. (249/1057) | ஈவாரை= கொடுப்பாரை, உள்ளுள்= நெஞ்சுக்குள், உவப்பது= மகிழ்வது, |
| (இரவுஅச்சம்) பிச்சை எடுக்க அஞ்சுதல் | இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து<br>கெடுக உலகு இயற்றியான். (250/1062) | இரந்து= பிச்சை எடுத்து, பரந்து= அலைந்து, இயற்றியான்= படைத்தவன், |
| | ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு<br>இரவின் இளிவந்தது இல். (251/1066) | ஆ= பசு, நாவிற்கு= நாக்கிற்கு, இரவின்= இரத்தலின், இளிவந்தது= இழிவானது |
| (கயமை) கீழ் மக்களின் தன்மை | மக்களே போல்வர் கயவர் அவர் அன்ன<br>ஒப்பாரி யாம் கண்டது இல். (252/1071) | ஒப்பாரி= ஒப்பு, (ஒத்து இருக்கும்) ஒப்புமையான |
| | தேவர் அனையர் கயவர் அவரும் தாம்<br>மேவன செய்து ஒழுகலான். (253/1073) | அனையர்= போன்றவர், மேவன= விரும்பியன, |
| | சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்<br>கொல்லப் பயன்படும் கீழ். (254/1078) | சொல்லப்பயன்படுவர்= சொன்னாலே இரங்கி உதவுவார், கீழ்= கீழ்மக்கள் |

**தகைஅணங்கு உறுத்தல் - பெண்ணின் அழகு வருத்துதல்**

255 அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும் என் நெஞ்சு. (1081)

அணங்கு= தெய்வமகள், கனங்குழை= கனத்தகாதணி, மாதர்= பெண்ணோ, மாலும்= மயங்குகிறது

**புணர்ச்சி மகிழ்தல் - காதலர் தழுவி மகிழ்தல்**

256 பிணிக்கு மருந்து பிறமன் அணிஇழை
தன் நோய்க்குத் தானே மருந்து. (1102)

பிறமன்= மற்றபொருள்கள், அணி இழை= அணிகலன் அணிந்த பெண்

**நலம் புனைந்து உரைத்தல் - தலைவியின் அழகைப் பாராட்டுதல்**

257 நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம் வீழ்பவள். (1111)

நன்னீர்= நல்ல நீரில், வாழி= வாழுகிற, அனிச்சமே= அனிச்ச மலரே, மென்னீரள்= மெல்லியலாள், வீழ்பவள்= விரும்பும் காதலி,

**காதல் சிறப்பு உரைத்தல் - காதலர் தம் காதலின் ஆழத்தைக் கூறுதல்**

258 பாலொடு தேன் கலந்தற்றே பணிமொழி
வால்எயிறு ஊறிய நீர். (1121)

பணிமொழி= மெதுவாகப் பேசுகிற, வால்= வெள்ளிய, எயிறு= பல்,

**நாணுத்துறவு உரைத்தல் - நாணம் அழிந்து ஏக்கம் வெளிப்படல்**

259 கடல் அன்ன காமம் உழந்தும் மடல் ஏறாப்
பெண்ணின் பெருந்தக்கது இல். (1137)

காமம்= காதல் நோய், உழந்தும்= துன்புற்றும், மடல் ஏறுதல்= காதலுக்காக வருத்துதல், பெருந்தக்கது= பெருமை உடையது,

**அலர் அறிவுறுத்தல் - காதலர் பற்றி ஊரார் முணுமுணுத்தல்**

260 ஊரவர் கௌவை எருவாக அன்னை சொல்
நீராக நீளும் இந்நோய். (1147)

கௌவை= பழி தூற்றுதல், நீளும்= தொடரும்,

**பிரிவு ஆற்றாமை - பிரிவைப் பொறுக்க இயலாமை**

261 செல்லாமை உண்டேல் எனக்குஉரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை. (1151)

செல்= செல்லுதல், வல்வரவு= விரைந்த வரைவு, வாழ்வார்க்கு= வாழ்பவருக்கு,

**படர்மெலிந்து இரங்கல் - பிரிவால் தலைவியின் உடல் மெலிந்து வருந்துதல்**

262 காமக் கடும்புனல் நீந்திக் கரை காணேன்
யாமத்தும் யானே உளேன். (1167)

கடும்= பெரிய, யாமத்தும்= நடு இரவிலும், யானே= நானே,

**கண்விதுப்பு அழித்தல் - காணும் ஆசையால் கண் தனக்குள்ள அழகு அழிதல்**

263 வாராக்கால் துஞ்சா வரின் துஞ்சா ஆயிடை
ஆர் அஞர் உற்றன கண். (1179)

துஞ்சா= தூங்காது, ஆயிடை= ஆகவே, ஆர்= மிக்க, அஞர்= துன்பம்

**தனிப்படர் மிகுதி - தனிமைத் துயரத்தால் வருந்துதல்**

264 வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி. (1192)

பயந்தற்று= மழைபெய்ததைப் போன்று, விழவார்= விரும்பப் பட்டவர், அளி= அருள்

**நினைந்தவர் புலம்பல் - கூடி மகிழ்ந்திருந்த நாள்களை எண்ணிப் புலம்பல்**

265 உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது. (1201)

உள்ளின்= நினைத்தால்,

**கனவு நிலை உரைத்தல் - கண்ட கனவினைத் தோழியிடம் கூறுதல்**

266 காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாது செய்வேன்கொல் விருந்து. (1211)

தூதொடு வந்த= தூது கொண்டு வந்த, யாதுசெய்வேன்= என்ன செய்வேன்,

**பொழுது கண்டு இரங்கல் - மாலைப் பொழுது கண்டு வருந்துதல்**

267 காலை அரும்பிப் பகல் எல்லாம் போதாகி
மாலை மலரும் இந்நோய். (1227)

போதாகி= மலரும் பருவத்து அரும்பாகி,

**உறுப்பு நலன் அழிதல் - பிரிவுத் துயரால் உடல் உறுப்புகள் வேறுபாடு அடைதல்**

268 தொடியொடு தோள் நெகிழ நோவல் அவரைக்
கொடியர் எனக்கூறல் நொந்து. (1236)

தொடி= வளையல், நெகிழ= மெலிய, நோவல்=வருந்துதல், கொடியர்= கொடியவர், நொந்து= வருந்துதல்

**நெஞ்சொடு சினத்தல் - தனக்குள் தானே புலம்புதல்**

269 பரிந்து அவர் நல்கார் என்று ஏங்கிப் பிரிந்தவர் பின்
செல்வாய் பேதை என் நெஞ்சு. (1248)

பரிந்து= இறங்கி, நல்கார்= அருள் செய்யார், பேதை= அறிவற்ற,

**நிறை அழித்தல் - அடக்கம் அழிதல், ஆசை வெளிப்படுதல்**

270 பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோ நம்
பெண்மை உடைக்கும் படை. (1258)

பன்மாயக்கள்வன்= பல மாயங்கள் செய்யும் தலைவன், பணிமொழி= அன்பு மொழி,

**அவர் வயின் விதும்பல் - பிரிந்தவர் விரைந்து வர விரும்புதல்**

271 ஒருநாள் எழுநாள்போல் செல்லும் சேண்சென்றார்
வருநாள் வைத்து ஏங்குபவர்க்கு. (1269)

எழுநாள்போல்= ஏழுநாள்கள் போல், சேண்= தொலைவு,

**குறிப்பு அறிவு உறுத்தல் - விருப்பத்தைக் குறிப்பால் உணர்த்துதல்**

272 முகை மொக்குள் உள்ளது நாற்றம் போல் பேதை நகை
மொக்குள் உள்ளது ஒன்று உண்டு. (1274)

முகைமொக்கு= மலரின் அரும்பு, நகை மொக்கு= புன்முறுவல்

**புணர்ச்சி விதும்பல் - புணர்ச்சியை விரும்பும் நிலை**

273 மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன்
செவ்வி தலைப் படுவார். (1289)

செவ்வி= தகுந்தசமயம், தலைப்படுவார்= பெறுவார்,

**நெஞ்சொடு புலத்தல் - தன் மனத்துடன் தானே கோபம் கொள்ளுதல்**

274 துன்பத்திற்கு யாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சம் துணையல் வழி. (1299)

துணையாவார்= துணை நிற்பார், துணையல்வழி= துணையாகாவிட்டால்,

**புலவி - மனைவியின் பொய்க்கோபம், கணவனின் சமாதானம்**

275 உப்பமைந்து அற்றால் புலவி அது சிறிது
மிக்கற்றால் நீள விடல் (1302)

அற்றால்= போல்வது, புலவி- மனைவியின் பொய்கோபம், கணவனின் சமாதானம், மிக்கற்று= மிகுந்தது போன்றது,

**புலவி நுணுக்கம் - பொய்க் கோபத்தின் நுட்பம்**

276 வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்து அழுதாள்
யார் உள்ளித் தும்மினீர் என்று. (1317)


வழுத்தினாள்= வாழ்த்தினாள், அழித்து= மறித்து, யார் உள்ளி= யரை நினைத்து

**ஊடல் உவகை - ஊடலின் சிறப்பை உணர்ந்து மகிழுதல்**

277 ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கு இன்பம்
கூடி முயங்கப் பெறின். (1330)

ஊடுதல்= பொய்கோபம், முயங்க= சேர,

உலக திருக்குறள் மாநாடு
லிவர்பூல்
இங்கிலாந்து 2018



சிவா பிள்ளை

<u>வெளியிடுபவர்</u>


சிவா பிள்ளை

கல்வி ஆய்வாளர்

கோல்ட்ஸ்மித்ஸ் கல்லூரி, லண்டன் பல்கலைக்கழகம்

இயக்குனர் தமிழ் அகாடமி ஆப் லாங்குவேஜ் & ஆர்ட்ஸ்

எடெக்செல் தமிழ் மொழிக்கான முதன்மை தேர்வாளர்

sivapillai@*gmail.com*

+44 (0) 20 88519096

MOB: 07951 476 706


லிவர்பூல்